இ) $K_4[Fe(CN)_6]$ ஈ) $K_2SO_4.2H_2O$

6) கிராபைட் மற்றும் வைரம் ஆகியன முறையே
அ) சகப்பிணைப்பு மற்றும் மூலக்கூறு படிகங்கள்
ஆ) அயனி மற்றும் சகப்பிணைப்பு படிகங்கள்
இ) இரண்டும் சகப்பிணைப்பு படிகங்கள்
ஈ) இரண்டும் மூலக்கூறு படிகங்கள்.

7) முதல் வகை வினைக்கான அரைவாழ்வு காலம்: (*)
அ) $t_{\frac{1}{2}} = \frac{0.6932}{K}$ ஆ) $t_{\frac{1}{2}} = \frac{K}{0.6932}$
இ) $t_{\frac{1}{2}} = \frac{2.303}{K}$ ஈ) $t_{\frac{1}{2}} = \frac{K}{2.303}$

8) பின்வரும் சேர்மங்களில் லூயிகாரமாக செயல்படாதது எது?
அ) $BF_3$ ஆ) $PF_3$ இ) $CO$ ஈ) $F^-$

9) பின்வரும் வினை நிகழ எவ்வளவு ஃபாரடே மின்னோட்டம் தேவைப்படும்
$$MnO_4^- \rightarrow Mn^{2+}$$
அ) $5F$ ஆ) $3F$ இ) $8F$ ஈ) $7F$

10) ஒரு கூழ்மக்கரைசல் வழியே ஒளிகற்றையை செலுத்தும் போது காணக்கிடைக்கும் நிகழ்வு
அ) எதிர்மின்வாய் தொங்கலசைவு
ஆ) மின்முனைக் கவர்ச்சி
இ) திரிதல் ஈ) டிண்டால் விளைவு.

11) தானியங்கி இயந்திரங்களின் ரேடியேட்டர்களில் உறை எதிர்பொருளாக பயன்படுவது எது?
அ) மெத்தனால் ஆ) எத்தனால்
இ) நியோபென்டைல் ஆல்கஹால்
ஈ) எத்தன்-1,2-டை ஆல்

12) பின்வருவனவற்றுள் கொடுக்கப்பட்ட சேர்மங்களின் அமிலத்தன்மையின் அடிப்படையிலான சரியான வரிசை
அ) $FCH_2COOH > CH_3COOH > Br\,CH_2COOH > ClCH_2COOH$
ஆ) $FCH_2COOH > ClCH_2COOH > Br\,CH_2COOH > CH_3COOH$
இ) $CH_3COOH > ClCH_2COOH > FCH_2COOH > Br\,CH_2COOH$
ஈ) $ClCH_2COOH > CH_3COOH > Br\,CH_2COOH > ICH_2COOH$

13) அனிலீன் + பென்சாயில்குளோரைடு $\xrightarrow{NaOH}$ $C_6H_5 - NH - COC_6H_5$ இந்த வினையானது
அ) ஃப்ரீடல் கிராஃப்ட் வினை ஆ) $HVZ$ வினை
இ) ஸ்காட்டன்-பௌமன் வினை ஈ) கோல்ப் வினை

14) பின்வருவனவற்றுள் எவை எபிமர்கள் ஆகும்?
அ) $D(+)$-குளுக்கோஸ் மற்றும் $D(+)$-காலக்டோஸ்
ஆ) $D(+)$-குளுக்கோஸ் மற்றும் $D(+)$-மான்னோஸ்
இ) (அ) மற்றும் (ஆ) இரண்டுமல்ல
ஈ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்

15) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று டாலன்ஸ் வினைக்காரணியை ஒடுக்குகிறது?
அ) ஃபார்மிக் அமிலம் ஆ) அசிடிக் அமிலம்
இ) பென்சோ பீனோன் ஈ) எதுவுமில்லை.

### பகுதி-II (6 x 2=12)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) ஆர்கானின் பயன்களைத் தருக.

17) சீக்லர்-நாட்டா வினைவேகமாற்றி குறிப்பு வரைக.

18) $VB$ கொள்கையின் வரம்புகள் யாவை?

19) அலகுக் கூட்டினை வரையறுக்கவும்.

20) லூயி அமிலங்கள் மற்றும் காரங்கள் என்றால் என்ன?எ.கா தருக.

21) கிளிசராலின் பயன்களை எழுதுக.

22) ரோசன்முன்ட் ஒடுக்க வினை குறிப்பு வரைக.

23) $D(+)$.ஃப்ரக்டோஸின் அமைப்பை வரைக.

24) 2 ஆம்பியர் மின்னோட்டத்தைக் கொண்டு சில்வர் நைட்ரேட் கரைசல் 20 நிமிடங்களுக்கு மின்னாற் பகுக்கப்படுகிறது. எனில் எதிர்மின் முனையில் படியும் சில்வரின் நிறையைக் கணக்கிடுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பகுதி-III** **(6 x 3=18)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

25) அமில வேதிக் கழுவுதலை ஒரு எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

26) போரிக் அமிலத்தின் பயன்கள் யாவை?

27) கீழ்காணும் ஈனிகளுக்கான $IUPAC$ பெயரினை எழுதுக. $a)\ C_2O_4{}^{2-}$ $b)\ H_2O$ $c)\ Cl^-$

28) வினைவகை மற்றும் மூலக்கூறு எண் வரையறுக்கவும்.

29) தாங்கல் கரைசல் என்றால் என்ன? எ.கா தருக.

30) பல படித்தான வினைவேக மாற்றம் என்றால் என்ன? எ.கா தருக.

31) அனிசோலின் புரோமினேற்ற வினையை எழுதுக.

32) ஸ்விட்டர் அயனி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

33) பின்வரும் வினையில் $A, B$ மற்றும் $C$ சேர்மங்களை கண்டறிக.




**பகுதி-IV** **(5 x 5=25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

34) (அ) மின்னாற் தூய்மையாக்கலின் தத்துவத்தினை ஒரு உதாரணத்துடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) சங்கிலித் தொடராக்கம் என்றால் என்ன? அதற்கான நிபந்தனைகளக் கூறுக.

35) (அ) ஹேலஜன் இடைச்சேர்மங்களின் பண்புகள் யாவை?

**(அல்லது)**

ஆ) லாந்தனைடுகளையும், ஆக்டினைடுகளையும் ஒப்பிடுக.

36) அ) $i)$ பொதிவுத் திறன் என்றால் என்ன?

$ii)$ ∴பிரங்கல் குறைபாடு பற்றி குறிப்பு வரைக.

**(அல்லது)**

ஆ) பூஜ்ஜிய வகை வினைக்கான தொகைப்படுத்தப்பட்ட சமன்பாட்டினை வருவிக்கவும்.

37) அ) நெர்ன்ஸ்ட் சமன்பாட்டைத் தருவிக்கவும்.

**(அல்லது)**

ஆ) வினைவேக மாற்றம் பற்றிய பரப்புகவர்தல் கொள்கையை விளக்குக.

38) அ) $i)$ கார்பாக்சிலிக் அமிலத்திற்கான மூன்று சோதனைகளை தருக.

$ii)$ பென்சாயின் குறுக்க வினையை எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிறுகுறிப்பு வரைக.

$i)$ அனிலீன் புரோமினேற்ற வினை

$ii)$ கடுகு எண்ணெய் வினை.

-ALL THE BEST

N.Srinivasan M.Sc.,M.Ed.,M.Phil., Sri V V Hr Sec School, V.C Puram

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## XII-MARCH-2023

### பகுதி-I (15 x 1=15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1) மெக்னீஷியா பால்மம் ------ ஆக பயன்படுகிறது
   அ) மன அமைதிபடுத்தி ஆ) வலி நிவாரணி
   இ) அமில நீக்கி ஈ) உணர்வு நீக்கி

2) ஒரு வேதி வினையின் போது சேர்க்கப்படும் வினை வேக மாற்றி பின்வருவனவற்றுள் எதை மாற்றியமைக் கிறது?
   அ) என்ட்ரோபி ஆ) அக ஆற்றல்
   இ) கிளர்வு ஆற்றல் ஈ) என்தால்பி

3) ஹால் ஹெரால்ட் செயல்முறையின்படி பிரித்தெடுக்கப் படும் உலோகம்
   அ) $Cu$ ஆ) $Al$ இ) $Zn$ ஈ) $Ni$

4) பின்வருவனவற்றுள் 1.73 $BM$ காந்தத் திருப்புத் திறன் மதிப்பினை பெற்றுள்ளது
   அ) $[CoCl_6]^{4-}$ ஆ) $Ti\,Cl_4$
   இ) $[Cu(NH_3)_4]^{2+}$ ஈ) $[Ni\,(CN)_4]^{2-}$

5) பின்வருவனவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?
   அ) நுரைப்பு - பனிமூட்டம்
   ஆ) பால்மம் - புகை
   இ) கூழ்மக் கரைசல் - கலக்கப்பட்ட கிரீம்
   ஈ) களி - வெண்ணெய்

6) பின்வருவனவற்றுள் எதை சேர்க்கும் போது கீழ்கண்ட பிரிகைச் சமநிலை வினையில் பொது அயனி விளைவை உருவாக்கும் ?

$$CH_3COOH\,(aq) \rightleftharpoons CH_3COO^-(aq) + H^+(aq)$$

   அ) $CH_3COCl$ ஆ) $AgCl$ இ) $CH_3Cl$ ஈ) $HCl$

7) $C_{60}$ என்ற வாய்பாடுடைய புல்லரீனில் உள்ள கார்பன் ----------- இனக்கலப்புடையது?
   அ) $sp^2$ ஆ) $sp^3$ இ) $sp^3d$ ஈ) $sp$

8) ஆக்டினாய்டுகளின் பொதுவான ஆக்சிஜனேற்ற நிலை
   அ) +4 ஆ) +2 இ) +6 ஈ) +3

9) **கூற்று:** ஹெக்ஸ்-4-ஈன் நைட்ரில் ஐ டைஐசோபியூட்டைல் அலுமினியம் ஹைட்ரைடுடன் வினைபடுத்தி பின் நீரால் பகுத்தால் ஹெக்ஸ்-4-ஈனல் ஐத் தருகிறது.
   **காரணம்**:டைஐசோபியூட்டைல் அலுமினியம் ஹைட்ரைடு ஒரு தேர்ந்த ஒடுக்கி ஆகும்.
   அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
   ஆ) கூற்று, காரயம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.
   ஈ) கூற்று, காரயம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

10) பின்வருவனவற்றில் எது காமா கதிர்வீச்சிற்கு ஒரு மூலமாக பயன்படுகிறது?
   அ) $Xe$ ஆ) $Ar$ இ) $Rn$ ஈ) $Kr$

11) திட்ட ஹைட்ரஜன் மின்முனையின் $(SHE)\ emf$ மதிப்பானது -----------
   அ) −1.0 ஆ) 0 இ) 1.1 ஈ) +1.0

12) உலோகம் அதிகம் உள்ள குறைபாடு காணப்படும் உலோகம் எது?
   அ) $NaCl$ ஆ) $AgBr$ இ) $AgCl$ ஈ) $FeO$

13) பின்வருவனவற்றுள் எந்த காரம் $DNA$-ல் இல்லை?
   அ) யூராசில் ஆ) அடினைன்
   இ) சைட்டோசைன் ஈ) குவானைன்

14) பின்வருவனவற்றுள் தானியங்கி இயந்திரங்களின் ரேடியேட்டர்களில் உறை எதிர் பொருளாகப் பயன் படுவது எது?
   அ) மெத்தனால் ஆ) ஈத்தேன்-1,2-டை ஆல்
   இ) எத்தனால் ஈ) கிளிசரால்

15) ஓரிணைய அமின்கள் அரோமேடிக் ஆல்டிஹைடுடன் வினைபுரிந்து கொடுக்கும் விளைபொருள்
   அ) ஷிஃப் காரம் ஆ) கார்பாக்சிலிக் அமிலம்
   இ) கீட்டோன் ஈ) அரோமேடிக் அமிலம்

### பகுதி-II (6 x 2=12)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) எவ்வகை தாதக்களை அடர்பிக்க நுரைமிதப்பு முறை ஏற்றது? இரு எடுத்துக்காட்டுகள் தருக.
17) சிலிகோன்களின் பயன்களை எழுதுக.
18) அணைவுச் சேர்மங்களில் மைய அணு என்பதனை வரையறுக்கவும்?
19) $FCC$ அலகுக் கூட்டில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுக.
20) இணை அமில-கார இரட்டைகள் என்றால் என்ன?
21) வினைவேக மாற்ற நச்சுகள் என்றால் என்ன?
22) அசிட்டோனை எவ்வாறு புரப்பேனாக மாற்றுவாய்?
23) ஹார்மோன்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.
24) பின்வரும் வினைவரிசையில் உள்ள $A$ மற்றும் $B$ சேர்மங்களைக் கண்டறிக.

$$CH_3CH_2NO_2 \xrightarrow{Sn\ /\ HCl} A \xrightarrow{CH_3\,CO\,Cl} B$$



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி-III (6 x 3=18)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

25) ∴பிஷ்ஷர் ட்ரோப் தொகுப்பு முறையைப் பற்றி குறிப்பு வரைக.

26) லாந்தனாய்டுகள், ஆக்டினாய்டுகள் இடையே உள்ள ஏதேனும் மூன்று வேறுபாடுகளை எழுதுக.

27) $[Pt\,(NO_2)(H_2O)(NH_3)_2]Br$ என்ற அணைவில் பின்வருவனவற்றைக் கண்டறிக.

அ) மைய உலோக அணு/அயனி

ஆ) அணைவு எண்

இ) மைய உலோக அயனியின் ஆக்சிஜனேற்றஎண்

28) ஹெல்ம்ஹோல்ட்ஸ் மின் இரட்டை அடுக்கு பற்றி குறிப்பு வரைக.

29) மின்னாற் பகுத்தல் பற்றிய ∴பாரடே விதிகளை எழுதுக

30) சுவிட்டர் அயனி ஒன்றின் அமைப்பை தருக.

31) எத்தில் அசிட்டேட்டை எவ்வாறு எத்தில் அசிட்டோ அசிட்டேட்டாக மாற்றுவாய்?

32) உணவு பதனப் பொருட்கள் என்பவை யாவை? இரு எடுத்துக்காட்டுகள் தருக.

33) ஒரு முதல் வகை வினையானது 99% நிறைவடைய தேவையான நேரம் அவ்வினை 90% நிறைவடைய தேவையான நேரத்தைப்போல இரு மடங்கு எனக் காட்டுக.

## பகுதி-IV (5 x 5=25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

34) அ) புலத்தூய்மையாக்கல் முறையினை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

ஆ) i) பின்வரும் சேர்மங்களில் ஹேலஜன்களின் ஆக்சிஜனேற்ற நிலையைக் கண்டுபிடிக்கவும்.

1) $OF_2$ 2) $I_2O_2$

ii) பின்வரும் வினைகளை பூர்த்தி செய்க.

1) $P_4 + NaOH + H_2O \rightarrow$

2) $XeF_6 + H_2O \rightarrow$

3) $Cu + con\ H_2SO_4 \rightarrow$

35) அ) $i)$ டைபோரேன் வடிவமைப்பை விவரிக்கவும்.

$ii)$ எத்தில் போரேட் சோதனையை எழுதுக.

(அல்லது)

ஆ) உலோகக் கார்பனைனல்களில் காணப்படும் பிணைப்பின் தன்மைகளை விவரிக்கவும்.

36) அ) ஷாட்கி மற்றும் ∴பிராங்கல் குறைபாடுகளை விளக்குக.

(அல்லது)

ஆ) $i)$ பூஜ்ய வினைக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

$ii)$ தோல் பதனிடுதல் மற்றும் இரப்பர் தொழிலில் கூழ்மங்கள் எவ்வாறு பயன்படுகிறது?

37) அ) ஆஸ்வால்ட் நீர்த்தல் விதிக்கான சமன்பாட்டை வருவிக்கவும்.

(அல்லது)

ஆ) $i)$ அனிலீன் ப்ரீடல் கிராப்ட்ஸ் வினைக்கு உட்படுவதில்லை ஏன்?

$ii)$ நைலான்-2-நைலான்-6 எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

38) அ)$i)$பென்சால்டிஹைடிலிருந்து மாலகைட் பச்சை எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

$ii)$ தோர்ப் நைட்ரைல் குறுக்க வினை குறிப்பு வரைக

(அல்லது)

ஆ) $C_6H_6O\ (A)$ என்ற சேர்மம் நடுநிலை $FeCl_3$ உடன் ஊதா நிறத்தைத் தருகிறது. சேர்மம் $(A)$ அம்மோனியா உடன் வினைபுரிந்து$(B)$ என்ற சேர்மத்தையும், மேலும் $Zn$-தூளுடன் வினைபுரிந்து $(C)$ என்ற சேர்மத்தையும் தருகிறது. $A, B, C$ சேர்மங்களை கண்டறிந்து வினைகளை விளக்குக.

-ALL THE BEST



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## XII-JUNE-2023

**பகுதி-I (15 x 1=15)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1). பொருத்துக:

| | |
|---|---|
| 1) சயனைடு செயல்முறை | i) மிகத் தூய்மையான Ge |
| 2) நுரைமிதப்பு முறை | ii) Al பிரித்தெடுத்தல் |
| 3) மின்னாற் ஒடுக்கம் | iii) ZnS தாதுவை அடர்பித்தல் |
| 4) புலத்தூய்மையாக்கல் | iv) Au பிரித்தெடுத்தல் |

அ) (1)-(i),(2)-(ii),(3)-(iii),(4)-(iv)
ஆ) (1)-(ii),(2)-(iv),(3)-(i),(4)-(iii)
இ) (1)-(iv),(2)-(iii),(3)-(ii),(4)-(i)
ஈ) (1)-(iii),(2)-(i),(3)-(iv),(4)-(ii)

2) டை போரேனில் வளைந்த பாலப்பிணைப்பில் ஈடுபட்டுள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை
அ) ஆறு ஆ) இரண்டு
இ) நான்கு ஈ) மூன்று

3) $PCl_3$ –ன் நீராற்பகுப்பினால் உருவாவது:
அ) $H_3BO_3$ ஆ) $PH_3$
இ) $H_3BO_4$ ஈ) $POCl_3$

4) அமில ஊடகத்தில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் ஆனது ஆக்சாலிக் அமிலத்தை இவ்வாறாக ஆக்சிஜனேற்றம் அடையச் செய்கிறது.
அ) ஆக்சலேட் ஆ) கார்பன் டை ஆக்ஸைடு
இ) அசிட்டேட் ஈ) அசிடிக் அமிலம்

5) $[Pt(Py)(NH_3)(Br)(Cl)]$ என்ற அணைவுச் சேர்மத்திற்கு சாத்தியமான வடிவ மாற்றியங்கள் எத்தனை?
அ) 3 ஆ) 4 இ) 0 ஈ) 15

6) கிரா∴பைட் மற்றும் வைரம் ஆகியன முறையே
அ) சகப்பிணைப்பு மற்றும் மூலக்கூறு படிகங்கள்
ஆ) அயனி மற்றும் சகப்பிணைப்பு படிகங்கள்
இ) இரண்டும் சகப்பிணைப்புப் படிகங்கள்
ஈ) இரண்டும் மூலக்கூறு படிகங்கள்

7) ஒரு வினையின் வினைவேக மாறிலியின் மதிப்பு $5.8 \times 10^2\, S^{-1}$ அவ்வினையின் வினைவகை
அ) முதல் வகை ஆ) பூஜ்ய வகை
இ) இரண்டாம் வகை ஈ) மூன்றாம் வகை

8) பின்வரும் புளுரோ சேர்மங்களில் லூயி காரமாக செயல்படக் கூடியது?
அ) $BF_3$ ஆ) $PF_3$ இ) $CF_4$ ஈ) $SiF_4$

9) மொத்தமாக 9650 கூலூம்கள் மின்னூட்டத்தை பெற்றுள்ள எலக்ட்ரான்களின் எண்ணிக்கை
அ) $6.22 \times 10^{23}$ ஆ) $6.022 \times 10^{24}$
இ) $6.022 \times 10^{22}$ ஈ) $6.022 \times 10^{34}$

10) ஒரு வாயுவானது ஒரு திண்ம உலோக பரப்பின் மீது பரப்பு கவரப்படுதல் என்பது தன்னிச்சையான மற்றும் வெப்பம் உமிழ் நிகழ்வாகும். ஏனெனில்
அ) $\Delta H$ அதிகரிக்கிறது ஆ) $\Delta S$ அதிகரிக்கிறது
இ) $\Delta G$ அதிகரிக்கிறது ஈ) $\Delta S$ குறைகிறது

11) கார்பாலிக் அமிலம் என்பது
அ) பீனால் ஆ) பிக்ரிக் அமிலம்
இ) பென்சாயிக் அமிலம் ஈ) பினைல் அசிடிக் அமிலம்

12) பின்வரும் வினையில்,

$$HC \equiv CH \xrightarrow{H_2SO_4\ /\ HgSO_4} X;$$

விளைபொருள் $X$ --------- தராது
அ) டாலன்ஸ் சோதனை ஆ) விக்டர்மேயர் சோதனை
இ) அயோடோபார்ம் சோதனை ஈ) ∴பெலிங்சோதனை

13) ஈரிணைய நைட்ரோ ஆல்கேன்கள் நைட்ரஸ் அமிலத்துடன் வினைபுரிந்து கொடுப்பது
அ) சிவப்பு நிற கரைசல் ஆ) நீல நிற கரைசல்
இ) பச்சை நிற கரைசல் ஈ) மஞ்சள் நிறக் கரைசல்

14) பின்வருவனவற்றுள் நீரில் கரையும் விட்டமின் எது?
அ) வைட்டமின் E ஆ) வைட்டமின் K
இ) வைட்டமின் A ஈ) வைட்டமின் B

15) ஆஸ்பிரின் என்பது
அ) அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்
ஆ) பென்சாயில் சாலிசிலிக் அமிலம்
இ) குளோரோ பென்சாயிக் அமிலம்
ஈ) ஆந்த்ரனிலிக் அமிலம்

**பகுதி-II (6 x 2=12)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) பின்வருவனவற்றிற்கு ஒரு உதாரணம் தருக.
(i) ஐசோசஜன் (ii) சால்கோஜன்

17) கந்தக அமிலம் ஒரு நீர்நீக்கும் காரணி-எடுத்துக்காட்டு தருக

18) இடைச்செருகல் சேர்மங்கள் என்றால் என்ன?

19) ஒரு வினையின் அரைவாழ் காலத்தை வரையறு.

20) இயற்புறப்பரப்பு கவர்தலின் சிறப்புப் பண்புகள் இரண்டினை தருக.

21) எத்திலீன் கிளைக்கால் அடர் $H_2SO_4$ உடன் வினை என்ன?

22) ∴பார்மலீன் என்றால் என்ன? அதன் பயனைத் தருக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

23) மக்கும் பலபடிகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

24) $2 \times 10^{-3} M, H_3O^+$ அயனிச் செறிவைக் கொண்டுள்ள ஒரு பழரசத்தின் $OH^-$ அயனிச் செறிவை கணக்கிடுக. கரைசலின் தன்மையை கண்டறிக.

**பகுதி-III (6 x 3=18)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

25) எலிங்கம் வரைபடத்தின் வரம்புகள் யாவை?

26) ஹீலியத்தின் பயன்கள் யாவை?

27) $K_4[Mn(CN)_6]$ அயைவின் மைய உலோக அயனியின் ஆக்சிஜனேற்ற நிலை, அணைவு எண், ஈனியின் தன்மை ஆகியவற்றை குறிப்பிடுக.

28) ஒரு வினையின் வினைவேகம் மற்றும் வினைவேக மாறிலி வேறுபடுத்துக.

29) கரைப்பான் விரும்பும் கூழ்மங்கள், கரைப்பான் வெறுக்கும் கூழ்மங்களை விட அதிக நிலைப்புத் தன்மை வாய்நதவை ஏன்?

30) $M_1$ மற்றும் $M_2$ ஆகிய இரண்டு உலோகங்களின் ஒடுக்க மின்னழுத்தங்கள் முறையே $E^0{}_{M1^{2+}/M_1} = -2.3V$ மற்றும் $E^0{}_{M2^{2+}/M_2} = 0.2V$. இவை இரண்டில் எந்த ஒன்று இரும்பின் புறப்பரப்பின் மீது பூசுவதற்கு சிறந்தது? கொடுக்கப்பட்டுள்ளது $E^0_{Fe^{2+}/Fe^-} = -0.44V$

31) ஐசோபியூடிலினை ஒடுக்க ஓசோன் பிளப்பிற்கு உட்படுத்தும் போது என்ன நிகழும்?

32) இரப்பரின் வல்கனைசிங் பற்றி குறிப்பு வரைக.

33) பின்வரும் வினைவரிசையில் உள்ள $A, B$ & $C$ சேர்மங்களை கண்டறிக.

$$C_6H_5NO_2 \xrightarrow{Sn\,/\,HCl} A \xrightarrow{NaNO_2+HCl\,/\,273K} B \xrightarrow{C_6H_5OH} C$$

**பகுதி-IV (5 x 5=25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

34) **அ)** i) நிக்கலைத் தூய்மையாக்கல் முறையை விளக்குக.

ii) உருக்கிப் பிரித்தல் முறை பற்றி எழுதுக.

**(அல்லது)**

**ஆ)** i) ஹைட்ரோபோரோனேற்ற வினைபற்றி குறிப்பு வரைக.

ii) $SO_2$ ன் வெளுக்கும் பண்பை விளக்குக.

35) **அ)** லாந்தனைடு குறுக்கம் என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை?

**(அல்லது)**

**ஆ)** $[Co(en)_2Cl_2]^+$ என்ற அணைவுச் சேர்மத்திற்கு சாத்தியமான அனைத்து வடிவ மாற்றியங்களையும் வரைக? ஆவற்றுள் ஒளி சுழற்றும் தன்மையுடைய மாற்றியங்களை கண்டறிக.

36) **அ)** படிக திண்மங்களை படிக வடிவமற்ற திண்மங்களிலிருந்து வேறுபடத்துக.

**(அல்லது)**

**ஆ)** பூஜ்ய வகை வினைக்கான தொகைப்படுத்தப்பட்ட வேகவிதியை வருவிக்க.

37) **அ)** வினைவேக மாற்றம் பற்றிய இடைநிலைசேர்மம் உருவாதல் கொள்கையை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

**ஆ)** உயிரினங்களில் புரதங்களின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுக

38) **அ)** ஓரிணைய, ஈரிணைய மற்றும் மூவிணைய ஆல்கஹால்களை வேறுபடுத்தும் லூகாஸ் சோதனையை விளக்குக.

**(அல்லது)**

**ஆ)** சிறு குறிப்பு வரைக.

i) ஸ்காட்டன்-பௌமன் வினை

ii) கடுகு எண்ணெய் வினை.

-ALL THE BEST

N.Srinivasan M.Sc.,M.Ed.,M.Phil., Sri V V Hr Sec School, V.C Puram

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## XII-MARCH-2024

**பகுதி-I (15 x 1=15)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1).**கூற்று**: மோனோ கிளினிக் கந்தகம் என்பது மோனோ கிளினிக் படிக வகைக்கு ஒரு உதாரணம்

**காரணம்**: மோனோகிளினிக் படிக அமைப்பிற்கு $\alpha \neq b \neq c$ மேலும் $\alpha = \gamma = 90^0, \beta = 90^0$

அ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.

ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கமாகும்.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி மேலும் காரணமானது கூற்றிற்கான சரியான விளக்கமல்ல.

2) $K_3[Al(C_2O_4)_3]$ என்ற அணைவுச் சேர்மத்தின் $IUPAC$ பெயர்

அ) பொட்டாசியம் ட்ரிஸ் ஆக்சலேட்டோ அலுமினேட்$(III)$

ஆ) பொட்டாசியம் ட்ரை ஆக்சலேட்டோ அலுமினியம்$(III)$

இ) பொட்டாசியம் ட்ரை ஆக்சலேட்டோ அலுமினினேட்$(III)$

ஈ) பொட்டாசியம் ட்ரை ஆக்சலேட்டோ அலுமினினேட்$(II)$

3) பின்வருவனவற்றுள் வலிமையான அமிலம் எது?

அ) $HBr$ ஆ) $HI$ இ) $HCl$ ஈ) $HF$

4) பின்வருவனவற்றுள் $SP^2$ இனக்கலப்பு இல்லாதது எது?

அ) புல்லரீன் ஆ) கிரா∴பைட்

இ) உலர் பனிக்கட்டி ஈ) கிரா∴பீன்

5) $RNA$-வில் காணப்படும் பிரிமிடின் காரங்கள்

அ) சைட்டோசைன் மற்றும் தையமின்

ஆ) சைட்டோசின் மற்றும் அடினைன்

இ) சைட்டோசின் மற்றும் யுராசில்

ஈ) சைட்டோசின் மற்றும் குவானைன்

6) ஆஸ்பிரின் என்பது

அ) குளொரோ பென்சாயிக் அமிலம்

ஆ) அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்

இ) ஆக்சாலிக் அமிலம்

ஈ) பென்சாயில் சாலிசிலிக் அமிலம்

7) அமில ஊடகத்தில் பொட்டாசியம் பெர்மாங்கனேட் ஆனது ஆக்சாலிக் அமிலத்தை ------ ஆக ஆக்சிஜனேற்றம் அடையச் செய்கிறது.

அ) அசிட்டேட் ஆ) ஆக்சலேட்

இ) அசிடிக் அமிலம் ஈ) கார்பன்டைஆக்சைடு

8) அனிலீனானது அசிடிக் அமில நீரிலியுடன்வினைப்பட்டு கொடுக்கும் விளைபொருள்

அ) $P$-அமினோ அசிட்டோபீனோன்

ஆ) $O$-அமினோ அசிட்டோபீனோன்

இ) அசிட்டனிலைடு

ஈ) $m$-அமினோ அசிட்டோபீனோன்

9) கீழ்கண்டவற்றுள் எது நீராற்பகுப்படையாது?

அ) சோடியம் குளொரைடு ஆ) சோடியம் பார்மேட்

இ) அம்மோனியம் பார்மேட் ஈ)அம்மோனியம் நைட்ரேட்

10) பின்வரும் மின்கலங்களில் எவை முதன்மை மின்கலங்களாகும்?

$i)$ லெக்லாஞ்சே மின்கலம்

$ii)$ நிக்கல் காட்மியம் மின்கலம்

$iii)$ லெட் சேமிப்புக்கலன் $iv)$ மெர்குரி மின்கலம்

அ) $ii)$மற்றும் $iv)$ ஆ) $i)$ மற்றும் $iv)$

இ) $ii)$ மற்றும் $iii)$ ஈ) $i)$ மற்றும் $iii)$

11) அசிட்டோனிலிருந்து சயனோஹைட்ரின் உருவாகும் வினை பின்வருவனவற்றுள் எதற்கு சான்றாக உள்ளது?

அ) எலக்ட்ரான் கவர் சேர்ப்பு வினை

ஆ) கருகவர் பதிலீட்டு வினை

இ) கருகவர் சேர்ப்பு வினை

ஈ) எலக்ட்ரான் கவர் பதிலீட்டு வினை

12) ஒரு வினையின் வினைவேக மாறிலியின் மதிப்பு $5.8 \times 10^{-2} S^{-1}$ எனில் அவ்வினையின் வினைவகை?

அ) இரண்டாம் வகை ஆ) முதல் வகை

இ) மூன்றாம் வகை ஈ) பூஜ்ஜிய வகை

13) மின்னாற்பகுத்தல் முறையில் காப்பரைத் தூய்மை யாக்குவதில் பின்வருவனவற்றுள் எது நேர்மின்வாயாக செயல்படுகிறது?

அ) கார்பன் தண்டு ஆ) தூய காப்பர்

இ) பிளாட்டினம் மின்வாய் ஈ) தூய்மையற்ற காப்பர்.

14) இரும்பு வினைவேகமாற்றியின் செயல்திறனை அதிகரிக்கும் சேர்மம்.

அ) $CH_3COOH$ ஆ) $H_2S$

இ) $Al_2O_3$ ஈ) $As_2O_3$

15) ஓரிணைய ஆல்கஹால்களின் ஆக்சிஜனேற்றத்தை ஆல்டிஹைடு உருவாகும் நிலையிலேயே நிறைவு செய்ய பயன்படும் ஆக்சிஜனேற்றியானது

அ) $Na_2Cr_2O_7$ ஆ) $KMnO_4$

இ) $Na_2Cr_2O_7$ ஈ) $PCC$

**பகுதி-II (6 x 2=12)**

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) காற்றில்லாச் சூழலில் வறுத்தல் என்றால் என்ன?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



17) போரிக் அமிலத்தை எவ்வாறு போரான் நைட்ரைடு ஆக எவ்வாறு மாற்றுவாய்?

18) கந்தக அமிலம் ஒரு நீர்நீக்கும் காரணி ஒரு எடுத்துக்காட்டுடன் நிறுவுக.

19) பொது அயனி விளைவை ஒரு எடுத்துக்காட்டுடன் நிறுவுக.

20) $Fe^{3+}$ அயனியின் திட்ட நிலைமைகளில் புரோமைடை புரோமினாக ஆக்சிஜனேற்றம் அடையச் செய்யுமா? கொடுக்கப்பட்டது: $E^0_{Fe^{2+}/Fe^{2+}} = 0.771V$

$$E^0_{Br/Br^-} = 1.09V$$

21) கோல்.ஃ.ப் வினையை எழுதுக.

22) கீழ்கண்டவற்றின் அமைப்பை எழுதுக.
$\alpha - D$-குளுக்கோபைரனோஸ் மற்றும்
$\alpha - D$-குளுக்கோபைரனோஸ்

23) எதிர் உயிரிகள் என்றால் என்ன?

24) வினைவகை என்றால் என்ன?

## பகுதி-III (6 x 3=18)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

25) ஹீலியத்தின் பயன்களைத் தருக.

26) $Fe^{3+}$அல்லது $Fe^{2+}$ எது அதிக நிலைப்புத் தன்மை உடையது? ஏன்?

27) அலுமினியமானது கனசதுர நெருங்கிப் பொதிந்த அமைப்பில் படிகமாகிறது. அதன் உலோக ஆரம் $125pm$ அலகுக் கூட்டின் விளிம்பு நீளத்தைக் கணக்கிடுக.

28) அர்ஹீனியஸ் சமன்பாட்டினை எழுதி அதில் இடம் பெற்றுள்ளவற்றை விளக்குக.

29) இயற்புறப்பரப்பு கவர்தல் மற்றும் வேதிப்புறப்பரப்பு கவர்தல் ஆகியவற்றின் மீது வெப்பநிலை மற்றும் அழுத்தத்தின் விளைவினை விளக்குக.

30) நோவெநகல் வினையை விளக்குக.

31) ஓரிணைய அமின் கார்பன் டை சல்பைடுடன் புரியும் வினையை எழுதுக.

32) பெப்டைடு பிணைப்பு பற்றி சிறுகுறிப்பு வரைக.

33) $[Co(CN)_2Cl_2]Cl$ என்ற அணைவில் பின்வருவன வற்றைக் கண்டறிக.
$i)$ $IUPAC$ பெயர் $ii)$ மைய உலோக அயனி
$iii)$ அணைவு எண்

## பகுதி-IV (5 x 5=25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

34) **அ)** i) கனிமம்,தாது ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் யாவை?
ii) காப்பர் பிரித்தெடுத்தல் செயல்முறையில் சிலிகானின் பங்கு என்ன?

**(அல்லது)**

**ஆ)** i) போரிக் அமிலத்தின் பயன்களை எழுதுக.
ii) சிலிகேட்டுகள் என்றால் என்ன?

35) **அ)** லாந்தனைடு குறுக்கம் என்றால் என்ன? அதன் விளைவுகள் யாவை?

**(அல்லது)**

**ஆ)** ) இரட்டை உப்புகள் மற்றும் அணைவுச் சேர்மங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.
$ii)$ மருத்துவத் துறையில் பயன்படும் ஓர் அணைவுச் சேர்மம் மற்றும் உயிரியல் முக்கியத்துவம் வாய்ந்த அணைவுச் சேர்மம் ஆகியவற்றுக்கு உதாரணம் தருக.

36) **அ)** எளிய கனசதுர படிக அமைப்பின் பொதிவுதிறனை கணக்கிடுக.

**(அல்லது)**

**ஆ)** $i)$ $A \rightarrow$ விளைபொருள் என்ற பூஜ்ய வகை வினைக்கான தொகைப்படுத்தப்பட்ட வேகவிதியை வருவிக்க.
$ii)$ தாங்கல் திறன் வரையறுக்கவும்.

37) **அ)** $i)$ கால்வானிக் மின்கல குறியீடு முறையைப் பற்றி விளக்குக.
$ii)$ கோல்டு எண் - வரையறுக்கவும்

(அல்லது)

**ஆ)** லூகாஸ் சோதனை பற்றி குறிப்பெழுதுக.

38) **அ)** $i)$ கிரிக்னார்டு வினைகாரணியிலிருந்து அசிடிக் அமிலம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?
$ii)$ மக்கும் பலபடிகள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

**(அல்லது)**

**ஆ)** $C_2H_4O$ என்ற வாய்பாடு கொண்ட கரிமச் சேர்மம் $(A)$ ஆனது $Zn - Hg$ /அடர் $HCl$ உடன் வினைபுரிந்து சேர்மம்$(C)$(முதன்மை விளைபொருள்) மற்றும் சேர்மம் $(D)$-யைத் தருகிறது. மேலும் சேர்மம் $(C)$ ஆனது அடர் $HCl$ உடன் வினைபுரிந்து சேர்மம்$(E)$ (சமையல் வினிகர்) மற்றும் ஹைட்ராக்சிலமினைத் தருகிறது. $A, B, C, D$ மற்றும் $E$ ஆகியவற்றை கண்டறிந்து வினைகளை விளக்குக.

-ALL THE BEST



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

XII-CHEMISTRY (MAR-20 TO JUN-24)

## XII-JUNE-2024

### பகுதி-I (15 x 1=15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1) பின்வருவனவற்றுள் எத்தாதுவினை அடர்பிக்க நுரைமிதப்பு முறை ஒரு சிறந்த மறையாகும்.
அ) மேக்னடைட் ஆ) ஹேமடைட்
இ) கலீனா ஈ) கேசிட்டரைட்

2) பின்வரும் $P$-தொகுதி தனிமங்களில் சங்கிலித் தொடராக்கல் பண்பிணைப் பெற்றிருக்காத தனிமம் எது?
அ) கார்பன் ஆ) சிலிகன்
இ) காரீயம்($lead$) ஈ) ஜெர்மானியம்

3) $PCl_3$-ன் நீராற்பகுப்பினால் உருவாவது
அ) $H_3PO_3$ ஆ) $PH_3$
இ) $H_3PO_4$ ஈ) $POCl_3$

4) $[Pt(NH_3)_2Cl_2]$ என்ற அணைவுச்சேர்மம் பெற்றுள்ள மாற்றியம்
அ) அணைவு மாற்றியம் ஆ)இணைப்பு மாற்றியம்
இ) ஒளிசுழற்சி மாற்றியம் ஈ) வடிவ மாற்றியம்

5) $bcc$ அலகுக்கூட்டில் காணப்படும் வெற்றிடத்தின் சதவீதம்
அ) 48% ஆ) 23% இ) 32% ஈ) 26%

6) குறைந்த அழுத்தத்தில் டங்ஸ்டன் புறப்பரப்பில் பாஸ்பைனின்($PH_3$) சிதைவு வினை ஒரு முதல் வகை வினையாகும் ஏனெனில்
அ) வினைவேகமானது கவரப்பட்ட புறப்பரப்பிற்கு நேர் விகிதத்தில் உள்ளது
ஆ) வினைவேகமானது கவரப்பட்ட புறப்பரப்பிற்கு எதிர் விகிதத்தில் உள்ளது
இ) வினைவேகமானது கவரப்பட்ட புறப்பரப்பைசார்ந்து அமைவதில்லை.
ஈ) சிதைவடைதல் வேகம் மெதுவானதாகும்.

7) $+7$ என்ற அதிகபட்ச ஆக்சிஜனேற்ற நிலையினைப் பெற்றுள்ள ஆக்டினாய்டு தனிமம்
அ) $Np, Pu, Am$ ஆ) $U, Fm, Th$
இ) $U, Th, Md$ ஈ) $Es, No, Lr$

8) பின்வரும் புளுரோ சேர்மங்களில் லூயிகாரமாக செயல்படாதது எது?
அ) $BF_3$ ஆ) $PF_3$ இ) $CO$ ஈ) $F^-$

9) **கூற்று**: $Al^{3+}$ அயனியின் வீழ்படிவாக்கும் திறன் $Na^+$ அயனியை விட அதிகம்.
**காரணம்**: சேர்க்கப்பட்ட துகள்திரட்டு அயனியின் இணைதிறன் அதிகமாக உள்ளபோது, அதன் வீழ்படிவாக்கும் திறனும் அதிகம்.
அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமாகும்.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி, மேலும் காரணமானது கூற்றிற்கு சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

10) பின்வரும் வினை நிகழ எவ்வளவு ∴பாரடே மின்னோட்டம் தேவைப்படும் $MnO_4^- \rightarrow Mn^{2+}$
அ) $5F$ ஆ) $3F$ இ) $1F$ ஈ) $7F$

11) பின்வருவனவற்றுள் எச்சேர்மமானது மெத்தில் மெக்னீசியம் புரோமைடுடன் வினைபுரிந்து பின் நீராற்பகுக்க மூவிணைய ஆல்கஹாலைத் தரும்?
அ) பென்சால்டிஹைடு ஆ) புரப்பனாயிக் அமிலம்
இ) மெத்தில் புரப்பியோனேட் ஈ) அசிட்டால்டிஹைடு

12) பின்வரும் ஒரு வினைகாரணியுடன் அசிட்டோன் கருகவர் சேர்ப்பு வினையில் ஈடுபட்டு அதன் பின்னர் நீர் நீக்கம் அடைகிறது. அந்த வினைக்காரணி
அ) கிரிக்னார்டு வினைக்காரணி ஆ) Sn / HCl
இ) அமிலக்கரைசலிலுள்ள ஹைட்ரசீன்
ஈ) ஹைட்ரோசயனிக் அமிலம்.

13) பின்வரும் அமின்களில் அசிட்டைலேற்ற வினைக்கு உட்படாதது எது?
அ) மூவிணைய பியூட்டைல்அமின் ஆ) எத்தில் அமின்
இ) டை எத்தில் அமின் ஈ) ட்ரை எத்தில் அமின்

14) இன்சுலின் ஹார்மோன் என்பது வேதியியலாக ஒரு
அ) கொழுப்பு ஆ) ஸ்டீராய்டு
இ) புரதம் ஈ) கார்போஹைட்ரேட்

15) இயற்கை இரப்பர் கொண்டிருப்பது
அ) ஒன்னுவிட்ட சிஸ் மற்றும் டிரான்ஸ் அமைப்பு
ஆ) தன்னிசிசையான சிஸ் மற்றும் டிரான்ஸ் அமைப்பு
இ) அனைத்தும் சிஸ் அமைப்பு
ஈ) அனைத்தும் டிரான்ஸ் அமைப்பு

### பகுதி-II (6 x 2=12)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) தூய உலோகங்களை அவைகளின் தாதுக்களில் இருந்து பிரித்தெடுக்கும் படிநிலைகள் யாவை?

17) $P$-தொகுதி தனிமங்களில் முதல் தனிமத்தின் பண்புகள் பற்றி குறிப்பு வரைக.

18) $Lu(OH)_3$ மற்றும் $La(OH)_3$-ல் அதிக காரத்தன்மை உடையது எது? ஏன்?

19) அலகுக் கூட்டினை வரையறுக்கவும்.

20) $P^H$ என்பதை வரையறுக்கவும்.

21) வினைவேகமாற்ற நச்சுகள் பற்றி குறிப்பு வரைக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



22) டொலுவீனிலிருந்து பென்சாயிக் அமிலம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

23) வைட்டமின்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

24) $CH_3NO_2$ வாய்பாட்டிற்கு இரண்டு மாற்றியங்கள் உள்ளன. இரண்டையும் எவ்வாறு வேறுபடுத்துவாய்?

## பகுதி-III (6 x 3=18)

**ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

25) கந்தக அமிலத்தின் பயன்களைத் தருக.

26) இடைச்செருகல் சேர்மங்கள் என்றால் என்ன? ஓர் எ.கா தருக.

27) இணைப்பு மாற்றியம் என்றால் என்ன? எ.கா உடன் விளக்குக.

28) ஏதேனும் ஒரு திரிதல் முறையை விளக்குக.

29) லூயி அமிலங்கள் மற்றும் லூயி காரங்கள் என்றால் என்ன?

30) ஒடுக்கும் மற்றும் ஒடுக்கா சர்க்கரைகள் என்பவை யாவை? எடுத்துக்காட்டு தருக.

31) $A, B$ ஆகியவற்றைக் கண்டறிக.

$$\text{பென்சாயிக் அமிலம்} \xrightarrow{PCl_5} A \xrightarrow[\text{நீரற்ற } AlCl_3]{\text{பென்சீன்}} B$$

32) டெரிலீன் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

33) ஒரு முதல் வகை வினையின் வினைவேக மாறிலி $1.54 \times 10^{-3} s^{-1}$ அதன் அரைவாழ் காலத்தை கண்டறிக.

## பகுதி-IV (5 x 5=25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

34)அ) அலுமினியத்தின் மின்னாற் உலோகவியலை விளக்குக.

(அல்லது)

ஆ) $i)$ ஹேலஜன் இடைச்சேர்மங்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

$ii)$ பின்வருவனவற்றிற்கு மூலக்கூறு வாய்பாடு மற்றும் அமைப்பு வாய்பாடுகளைத் தருக.

$(A)$ பாஸ்பாரிக் அமிலம் $(B)$ நைட்ரிக் அமிலம்

35)அ) $i)$ ஹைட்ரோபோரோ ஏற்ற வினை குறிப்பு வரைக.

$ii)$ போராக்ஸின் பயன்களைத் தருக.

(அல்லது)

ஆ) எண்முகி படிகபுலத்தில் $d$-ஆர்பிட்டாலின் படிக புலப் பிளப்பினை குறிப்பிடும் வரைபடம் வரைக.

36)அ) பொருள் மைய கனச்சதுர அமைப்பில் பொதிவுத் திறன் சதவீதத்தினைக் கணக்கிடுக.

(அல்லது)

ஆ) $i)$ வினைவேக மாறிலியினை வரையறு.

$ii)$ இயற்புறப்பரப்பு கவர்தல், வேதிபுறப்பரப்பு கவர்தல் வேறுபடுத்துக.

37)அ) நெர்ன்ஸ்ட் சமன்பாட்டைத் தருவி.

(அல்லது)

ஆ) பின்வருனவற்றில் இருந்து பீனாலை எவ்வாறு பெறுவாய்?

$i)$ குளோரோ பென்சீன்

$ii)$ ஐசோபுரப்பைல் பென்சீன்

38)அ) ஓரிணைய,ஈரிணைய,மூவிணைய அமின்களை எவ்வாறு வேறுபடுத்தி அறிவாய்?

(அல்லது)

ஆ) $i)$ தொகுப்பு டிடர்ஜெண்டுகள் பற்றி குறிப்பு வரைக

$ii)$ கிளைசீன் மற்றும் அலனின் ஆகிவற்றிலிருந்து உருவாக வாய்ப்புள்ள டைபெப்டைடுகளின் வடிவங்களை வரைக.

-ALL THE BEST



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com